JSC-7-TA

# கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நீங்கள் பெறப்போகிற இழக்க போகிற பலன்கள் - நிகழ்ச்சி 7

**அறிவிப்பாளர்:** கிறிஸ்தவர்களுக்கு வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, “நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிச்சயமாக நிற்கவேண்டியிருக்கும்.” ஆனால் இந்த நியாயதீர்ப்பிற்கான நோக்கம் என்ன? இயேசு நம்முடைய பாவத்திற்கான கிரையத்தை செலுத்தி விட்டாரா தேவன் அவைகளை நினைவு கூறுவது இல்லையா?

அப்படியானால், கிறிஸ்தவர்கள் ஏன் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நிற்கவேண்டும்? இந்த நியாயதீர்ப்பிற்கும் இரட்சிப்பிற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா. இரட்சிப்பு என்பது ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுகொள்ளும்போது அவனுக்கு அளிக்கப்படுகிற இலவசமான ஈவாகும்.

ஆனா கிறிஸ்துவின் நியாசனம் என்பது அவர் நம்மை இரட்சித்ததற்கு பிறகு நாம் வாழும் முறையை சார்ந்து இருக்கிறது. கிறிஸ்துவுக்காக

நாம் செய்திட்ட அணைத்தும் அன்று பதிப்பிடபட்டு பலனளிக்கப்படுகிறது.

வேதம் சொல்கிறது, “ஏனென்னில் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது ஏற்ற பலனை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்”.

நாம் அவருக்காக செய்த நற்க்கிரியைகளுக்காக கிறிஸ்துவிடம் இருந்து பலனை பெறுவோம் என்பது நமக்கு தெரியும், ஆனா இங்க வேதம் என்ன சொல்கிறது என்றால் நம்முடைய தீமைக்கும் பலன் பெருவோம் என்கிறதே? உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் பெருகிற பலன்களை உண்மையில்லாத கிறிஸ்தவர்கள் பெறமாட்டார்களோ?

ஆனா கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக கண்ணீர் இருக்க வாய்ப்பிருக்கிறதா? அங்கு பலன்களை இழக்க நேரிடுமா, பதிப்பையும் கனத்தையும் பரலோகத்தில் நித்தியமாக நமது ஸ்தானத்தை இழக்க வாய்ப்பு இருக்கிறதா?

இந்த கேள்விகளுக்கு வேதாகமத்தில் இருந்து விடைகளை பெற்றுக்கொள்ள நமக்கு உதவியாக இன்றைக்கு Dr. எர்வின் லட்சர் நம்முடன் இருக்கிறார், மூடி திருச்சபையின் மூத்த போதகர் சிக்காகோ, இல்லினோசிஸ். நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். ஒரு கேள்வியுடன் துவங்க விரும்புகிறேன். வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் நியாயாத்தீர்ப்புகளுக்கு இடையே உள்ள வித்தியாசத்தை குறித்து என்ன நினைக்கிறீர்கள் பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு மற்றும் கிறிஸ்துவின் நியாயாசனம் என்னும் நியாயத்தீர்ப்பு? இந்த இரண்டிலும் தேவன் எப்படிப்பட்ட நியாயத்தீர்ப்பை கொடுக்க போகிறார்? நாம் எல்லாரும் இதில் ஏதாவது ஒரு நியாயத்தீர்ப்பில் நிற்க வேண்டியிக்கிறது என்று தேவன் சொல்லுகிறாரே, இதில் எந்த சிங்காசனத்திற்கு முன் நிற்க நீங்க விரும்புகிறீர்கள்? நீங்க சரியான நியாயாசனத்திற்கு முன்பாக நிர்ப்பீங்கன்ற உறுதி உங்களுக்கு இருக்குதா? இன்றைய எனது விருந்தினரும் நண்பருமான Dr. எர்வின் லட்சர், சிக்காகோ மூடி திருச்சபையின் மூத்த போதகராக இருக்கிறார், இல்லினோசிஸ் . இந்த முக்கியமான கேள்விகளுக்கு அவர் பதில் அளிப்பதை நீங்கள் கவனித்து கேட்கும்படி விரும்புகிறேன்.

**டாக்டர். எர்வின் லட்சர்:** ஜான், நாம் செய்ய வேண்டிய முக்கியமான காரியம் என்னவென்றால் முதலில் இந்த இரண்டு முக்கிய நியாயத்தீர்ப்புகளை பற்றி மக்கள் புரிந்துகொள்ளும்படி செய்யணும். நாம கிறிஸ்துவின் நியாயாசனத்தை பற்றி சொல்லிக்கொண்டு இருக்கிறோம். இது விசுவாசிகளுக்கு உரியது மேலும் இது பரலோகத்தில் நமது பலனை நிர்ணயிப்பதாக இருக்கிறது.

இன்னொரு நியாயத்தீர்ப்பும் இருக்கிறது, ' பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு' பூமியில் இருக்கும் அவிசுவாசிகள் எல்லாரும் தேவனுக்கு முன்பாக நின்று தனித்தனியாக நியாயந்தீர்க்கபடுவார்கள்.

வெளிப்படுத்தல் புத்தகத்தின் இருபதாவது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் பதிவை கவனித்து பாருங்கள்:

"பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்; அவருடைய சமுகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின; அவைகளுக்கு இடங்காணப்படவில்லை.

மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்."

சரி நண்பர்களே, இந்த காட்சியை நீங்கள் கற்பனை செய்து பார்க்கும்படியாக விரும்புகிறேன். முதலாவதாக, இந்த வந்து சேருகிற பலதரப்பட்ட மக்களை நீங்கள் பார்க்க வேண்டும். “மரித்தவர்கள், சிறியோர் பெரியோர் என, தேவனுக்கு முன்பாக நிற்க கண்டேன்.” அதாவது நீண்ட காலம் வாழ்ந்தவர்கள். குறுகிய காலம் வாழ்ந்தவர்களும் இருந்தார்கள். உலகத்தின் இந்த மூலையில் வாழ்ந்தவர்களும் உலகத்தின் மற்ற முனையில் இருப்பவர்களும் இருக்காங்க, அது ஆசியாவோ, ஆபிரிக்காவோ, ஐரோபாவோ, எதுவாகவேனுமானாலும் இருக்கலாம். இந்த காலகட்டத்தில் இருக்கிற வித்தியாசத்தை பாருங்க. சிலர் நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் மேலும் சிலர் இப்போது வாழ்ந்துகொண்டு இருப்பவர்கள் அல்லது வரப்போகிற காலங்களில் வாழ்பவர்களாக இருக்கலாம். எல்லாம் தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டும் எல்லாருக்கும் பொதுவான ஒன்றாக தான் இருக்கிறது. இங்க ஒரு மிஷனரியுடன் ஒரு ஊழியனும் சேர்ந்து நிற்ப்பார்கள். ஆனா அந்த ஊழியனோடு ஒருவரும் சேர்ந்து நிற்க மாட்டார்கள். அதாவது, உங்களுக்கு நீதி இருக்கும் - எதை நாம் நீதி என்று பல சமயங்களில் சொல்லுகிறோம் - அங்க நீதிமான்கள் அப்பறம் குற்றவாளிகளும் தேவனுக்கு முன்பாக நிற்ப்பார்கள். புஸ்தகங்கள் திறக்கப்படும்போது அவர்கள் நியாயந்தீர்க்கபட்டுவார்கள்.

இரண்டு விதமான புத்தகங்கள் இங்கு சொல்லப்பட்டு இருக்கிறது. ஜீவ புஸ்தகத்தில் பெயர் இல்லாதவர்கள் எல்லாரும், வேதம் சொல்கிறது, “அக்கினி கடலிலே தள்ளப்படுவார்கள்.” இன்னொரு புஸ்தகமும் இருக்கிறது அதில் உங்களுடைய கிரியைகள் அனைத்தும் எழுதப்பட்டு இருக்கும் நீங்கள் அதில் எழுதப்பட்டதின் அடிப்படியில் நியாயந்தீர்க்கப்படுவீர்கள். சரி, யாருமே கிரியைகளினால் இரட்சிக்கப்படுவதில்லை என்று சொல்லியிருக்கிறோம். இந்த நியாயத்தீர்ப்பின் நோக்கம் யார் பரலோகம் போவா யார் நரகத்திற்கு போவா என்பது அல்ல. வேதாகமத்தில் அப்படி எந்த மாதிரியான நியாயத்தீர்ப்பும் இல்லை. அவர்கள் எங்கு இருப்பார்கள் என்ற தீர்மானம் ஏற்கனவே எடுக்கப்பட்டு விட்டது. இங்கு கூடுகிற எல்லாரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள். எல்லாரும் அக்கினி கடலிலே தள்ளப்படுவார்கள். கிரியைகள் நம்மை இரட்சிப்பது கிடையாது ஆனா கிரியைகள் நியாயந்தீர்க்கப்பட ஏதுவானது. இயேசு தாமே தனித்தனியாக, அதாவது தேவன் தாமே தனித்தனியாக ஒவ்வொருவரையும் அவர்களுக்கு தெரிந்ததை வைத்து செய்த காரியங்களுக்கு நியாயந்தீர்த்திடுவார். இயேசு சொல்கிறார், “தன்னுடைய எஜமானுடைய சித்தத்தை அறிந்து அதன் படி செய்கிறவனுக்கு அடிகள் இருக்காது; தேவனுடைய சித்தத்தை அறியாமல் இருக்கிறவன் சில அடிகள் மாத்திரம் அடிக்கப்படுவான்.”

இந்த ஜனங்களிடம் காணப்படுகிற குறை என்ன? அவர்கள் நல்ல மனிதர்களாக இருக்கவில்லையா? இல்லை. மனிதனுடைய தரத்தை பார்க்கும்போது அவர்கள் சிறந்த மனிதர்கள் தான் ஆனால், நண்பர்களே, இன்றைக்கு அது மட்டும் உங்களுக்கு போதாது! ஏன்னா ஏற்கனவே சொல்லி இருக்கிறோம், நீங்க பரலோகம் போகனுண்ணா தேவனை போல பரிபூரணமான நபராக இருக்கணும் கிறிஸ்து மாத்திரமே பரிபூரணமடைய செய்திட முடியும். அவரை நாம் நம்பும்பொழுது, அவருடைய நீதி நமக்கு அளிக்கபடுகிறது அதனால தேவனை பொருத்தவரைக்கும், இயேசுவினுடைய நீதிக்கும் என்னுடைய சார்பில் காட்டப்படும் நீதிக்கும் எந்தவித வித்தியாசமும் காணப்படுவது இல்லை. ஆகவே, அவருடைய சார்பில் நானும் பரலோகத்தில் எற்றுகொள்ளப்படுகிறேன்.

ஆனால் இதுவரை அவரை எந்தவிதத்திலும் நம்பாதவர்கள், அதாவது சிலர் சொல்வாங்க, நா, இயேசுவை நம்புகிறேன் இருந்தாலும் ஞானஸ்நானத்தையும் என்னுடைய நற்கிரியைகளையும் என்னுடைய சடங்குகளையும் நம்புகிறேன் என்கிறார்கள்." அவை, எல்லாம், மறந்துவிடும் ஏன்னென்றால் அவை கிறிஸ்துவின் மீது நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசத்திற்கு இணையாக இருக்காது, இவை உங்கள் விசுவாசத்தின் மையமாக இருக்கிறதே - உங்க விசுவாசம் சிறியதாக இருந்தாலும், அது இயேசு கிறிஸ்துவின் மீது மட்டும்தான் இருக்கணும்.

இப்ப, ஜான், இந்த பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு என்பது எதிர்கால நிகழ்வு. எல்லாரும் தனித்தனியாக நியாயந்தீர்க்கப்படுவார்கள். எல்லாத்துக்கும் கடைசியில, அவங்க அக்கினி கடலில் தள்ளப்படுவாங்க. இதுல சில குழப்பம் இருப்பது புரியுது ஆனா இந்த பிரமாணங்களை உண்டாக்குவது நாம கிடையாதே; அதுக்கும் மேல என்னன்னா, நியாயத்தீர்ப்பானது ரொம்ப தீவிரமானதா இருக்குன்னு நினைக்கிறேன் ஏன்னா நித்தியம் முழுவதுமாக நாம பாடப்போற வரிகள், நீதிமான்களின் ராஜாவே உமது வழிகள் சத்தியமும் உண்மையுமானவைகள் என்பதே.'

ஆனா நற்செய்தி என்னன்னா இன்றைக்கு நீங்க உங்க பாவத்தில் இருந்து திரும்ப முடியும், கிறிஸ்துவிடம் திரும்பி, அவருடைய நீதியை பெற்றுகொள்ளுங்கள் அப்போது இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிர்ப்பீர்கள் - பரலோகத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைக்கும் என்பதை நிர்ணயிக்கும் இந்த நியாயத்தீர்ப்பு எத்தனை வித்தியாசமானது என்று பாருங்கள்.

**ஆன்கர்பெர்க்:** ஒரு தடவ பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புகும் அதுல தான இழந்துபோன மக்கள் எல்லாரும் நியாயந்தீர்க்கபடுவாங்க, அதுக்கும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கும் உள்ள வித்தியாசத்தை தெரிஞ்சுக்கணும், இங்க கிறிஸ்தவர்கள் எல்லாரும் கிறிஸ்துவால் மதிப்பிடப்படுவாங்க, நீங்க ஒருவேளை

கேட்கலாம், கிறிஸ்துவின் நியாயாசன நியாயத்தீர்ப்பு எப்போது நடக்கும்? அதற்கான பதில் இதோ. கவனிங்க:

**எர்வின் லட்சர்:** ஜான், எனக்கு தெரிஞ்சு இதற்கு பல காரணங்கள் இருக்குன்னு நினைக்கிறேன் அதாவது கிறிஸ்துவின் நியாயாசனமானது - கிறிஸ்தவர்களை நியாயந்தீர்க்கும் நிலையானது - சபை எடுத்துகொள்ளப்படுதல் என்று சொல்கிறோமோ அதற்கு பிறகு தான் நடக்குமென்று நினைக்கிறேன். நாம கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கு எடுத்துகொள்ளப்படுவோம். அங்க தான் அவர் நம்மை நியாயன்தீர்க்கிறார். அதுமட்டுமில்ல, சிலர் என்ன சொல்றாங்கன்னா, “சரி, அவரால நம்ம எல்லாரையும் தனிதனியா விசாரிக்க முடியாது ஏன்னா அவர் அப்படி செய்தாருன்னா, அதுக்கே பல நூற்றுகணக்கான ஆண்டுகள் ஆகும் என்கின்றனர்.” இந்த கேள்விக்கு எங்கிட்ட சரியான பதில் இருக்குன்னு என்னால சொல்ல முடியாது இருந்தாலும்: முதல்லாவதாக, நினைவிருக்கட்டும், நாம தேவனை பற்றிதான் பேசுகிறோம். அதனால அவர் இதற்கு பிரதிநிதியா யாரையும் நிறுத்த அவசியமில்லை. உங்க நண்பர்களோ மற்றவர்களோ நல்ல வார்த்தைகளை சொல்லி விளக்கி சொல்ல அவசியமில்ல ஏன்னா திடீருன்னு எல்லாம் தத்ரூபமா நடக்கிறது ஒரு ஒரு வினாடியில் உங்களுக்கு முன்பு ஒளிபரப்பி காட்டப்படும்.

அதனால எவ்வளவு நேரம் இந்த நியாயத்தீர்ப்பு நடக்கும் என்று யூகிக்க முடியுது ஆனா இருந்தாலும், சபை எடுத்துகொள்ளுதலுக்கு பிறகு

நடக்கிற ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துக்குள்ள, எல்லா விசுவாசிகளும் நியாயந்தீர்க்க பட்டு இருப்பார்கள் அதோடு நாம இங்க வாழ்கிற வாழ்க்கையை பற்றி கிறிஸ்து என்ன நினைத்தார் என்பதையும் நாம் அறிந்துகொள்வோம்.

**ஆன்கர்பெர்க்:** சரி, இப்ப இது கிறிஸ்துவின் நியாயாசனத்தின் போது நடக்கிறது என்றால், வேதம் சொல்லுகிற இந்த பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு எப்போது சம்பவிக்கும்? கவனிங்க:

**எர்வின் லட்சர்:** சரி பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு எப்போது சம்பைக்கும்? இது உபத்திரவ காலத்திற்கு பிறகு சம்பவிக்கும், ஆயிரம் வருட அரசாட்சிக்கு பின்பு நடக்கும், நித்தியம் துவங்குகிரதற்கு முன்பு சம்பவிக்கும் - இதை இந்த மாதிரியும் சொல்ல முடியும். அப்போதுதான் இந்த பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு உண்டாகும். இதன் விளைவாக தான், நித்தியம் ஆரம்பிக்கும், எல்லாத்துக்கும் முடிவுல இரண்டு வகையான மக்கள் தான் இருப்பாங்க: இரட்சிக்கப்பட்டவங்க இரட்சிக்க படாதவங்க. நித்தியம் முழுவது பரலோகமும் இருக்குது நரகமும் இருக்குது.

**ஆன்கர்பெர்க்:** கிறிஸ்துவின் நியாயாசனத்தை குறித்து எல்லாரும் கேட்கிற ஒரு கேள்வி இருக்கிறது என்று சொல்ல முடியும். இதுதான் அது: கேள்வி என்னன்னா: கிறிஸ்துவின் நியாயாசனம் வெளிப்படையாக நடக்குமென்று நினைகிறீர்களா? இது தனியா

இரகசியமா நடக்க வாய்ப்பு இல்லையா? அல்லது கிறிஸ்து உங்கள் வாழ்க்கையை உங்க குடும்பம் உங்க நண்பர்கள் சபை மக்கள் உங்களோடு உடன் வேலை செய்த மக்கள் உங்களை தெரிந்தவர்கள் என்ற எல்லாரையும் வைத்து தான் உங்களை நியாயந்தீர்ப்பாரா? சரி, இதோ அதற்கான பதில், கவனிங்க:

**எர்வின் லட்சர்:** அதாவது, ஜான், பெரும்பாலும் கேட்கப்படும் கேள்வி என்னனா, கிறிஸ்து நியாயாசனமானது பொதுவாக வெளிப்படையாக நடக்குமா? அது இரகசியமாக தனியறையில் இருக்காதா, எங்காவது மூலையில இருக்காதா?' சரி, நமக்கு அது தெரியாது, இருந்தாலும் வேதம் இது வெளிப்படியாக நடக்கும் ஒன்று என்றே கூறுகிறது. மத்தேயு இருபத்தி ஐந்தாம் அதிகாரத்தின் உவமை நினைவிருகிறதா அதே உவமை லூக்கா சுவிசெஷத்திலும் இருக்கிறது அங்க உண்மையுள்ள மனிதன் பலனை பெருகிறான் உண்மையில்லாத மனிதனோ அங்கிருந்தவர்கள் முன்பாக கண்டிக்கப்படுகிறான் என்று எழுதியிருக்கிறது. இப்ப, நியாயாசனம் வெளிப்படையாக இருந்தால், அது கொஞ்சம் பயமாத்தான் இருக்கும். என்னோட வாழ்க்கை எல்லாரும் பார்க்கும்படி வெட்டவெளிச்சமா இருப்பதை கரப்பானை செய்யுங்க. யாரால அதை தாங்கிக்கொள்ள முடியும்? சரி, இன்னும் சில விஷயங்கள் இருக்கு.

முதலாவதாக, நினைவிருக்கட்டும், இது கிறிஸ்துவின் நியாயாசனமாக இருக்கிறது. நம்முடைய பாவங்கள் சட்ட பூர்வமாக நீக்கப்பட்டு

விட்டது; ஆகையால், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று நாம் நம்பினால் நமக்கு அப்படிதான் காட்டப்படும். அதுதான் நம்பர் ஒன்.

ஆனா இரண்டாவது - இது ரொம்ப ஆழமான ஒன்று அதனால் இதையும் உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறன் - இறுதியில், என்ன இருந்தாலும் சரி கிறிஸ்து இப்படி தான் யோசிப்பார் என்கிற ஒரு எண்ணம் மட்டும் எனக்கு இருந்துச்சுன்னா அது போதுமானதாகும். அதாவது, சுவாரசயமாக இருக்கும், இந்த உலகத்தில மதத்தவங்க என்ன நினைப்பாங்கன்னு கவலை படுகிறோம். ஜனங்கள் தங்களுக்கே சொல்லிக்கொள்வார்கள், “இல்ல, என்னுடைய இருதயத்தில் இருக்கும் பாவங்கள் என் நண்பர்களுக்கு தெரிய கூடாது, ஆனா தேவனுக்கு எல்லாம் தெரியுமே இதுல என்ன மறைக்க இருக்கு!”

சரி, ஒரு விஷயத்தை நீங்க புரிஞ்சுக்கணும், இயேசுவுக்கு முன்பாக நாம நிற்கும்போது உயிர்த்தெழுந்த சரீரங்களில் இருப்போம், இது பெரிய விஷயம் என்னன்னா: கிறிஸ்து என்ன நினைக்கிறார் எனபதுதான? உண்மையில் உங்களோடு நிர்ப்பவர்களுடைய பார்வைக்கும் எந்த காரியமும் தெரியாத ஒரு சூழ்நிலைதான் இருக்கும். அதனால, ஒரே ஒரு விஷயத்துல மட்டும் நம்முடைய கவனம் இருக்கவேண்டியது முக்கியமென்று நினைக்கிறேன் ஒரே விஷயம்: இயேசு என்ன நினைக்கிறார்? ஏன்னா இந்த வாழ்க்கையில் தவறாக புரிந்துகொள்ளபடுவோம், தவறா நினைப்பாங்க; எல்லாரையும்

பிரியப்படுத்த முயலுவோம். கேள்வி என்னன்னா, "நாம அவரை பிரியப்படுத்துகிறோமா?"

**ஆன்கர்பெர்க்:** இப்ப இயேசு கிறிஸ்து நம்மை இரட்சித்தபோது, அவர் நம்முடைய எல்லா பாவங்களையும் மன்னித்துவிட்டார். சரியா? அதனால அவர் தனது நியாயாசனத்தில் இருந்து நியாயந்தீர்க்கும்போது, நம்முடைய மன்னிக்கப்பட்ட பாவங்கள் கிறிஸ்து நம்மை நியாயந்தீர்க்கும்போது அதில் சேர்க்கப்படுமா? எல்லா பாவங்களும் முன்னால வந்து நிற்குமா - தேவன் நான் உங்கள் பாவங்களை நினைவுகூருவதில்லை என்று சொல்லியிருக்கிறாரே? Dr. எர்வின் லட்சர் இந்த முக்கியமான கேள்விக்கு பதிலளிக்கிறார்: கவனியுங்கள்

**எர்வின் லட்சர்:** அதாவது, ஜான், இந்த கேள்வியை பற்றி நான் அதிகம் யோசித்திருக்கிறேன் ஏன்னா வேதம் சொல்கிறது தேவன் நம்முடைய பாவங்களை நினைவு கூர்வதில்லை. ஆனா, அதாவது, இந்த பகுதி தேவனுக்கு நமது கடந்த கால பாவங்களை பற்றி ஒன்றுமே தெரியாது என்று சொல்லல ஏன்னா அப்படி சொன்னா தேவனுக்கு ஒன்னுமே தெரியாதுன்னு சொல்றோமா ஏன்னா. இதற்கு என்ன அர்த்தம், அவர் அதை கருத்தில் கொள்வதில்லை; அவர் நமக்கு எதிராக அதை நிறுத்துவது இல்லை. அந்த பாவங்களுக்காக அவர் நம்மை கடினமான நியாயத்தீர்ப்பிற்கு உட்படுத்த போவது இல்லை.

ஆனா இப்படி சொல்றதால, நிச்சயம் இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நம்முடைய வாழ்க்கை முழுவதும் ஆய்வு

செய்யப்படும். இதை எப்படி எடுத்துகொண்டாலும் சரி, அப்போஸ்தலனாகிய பவுல் உண்மையில் நினைத்தார் அதாவது நாம சட்ட ரீதியாக மன்னிக்கபட்டோம் என்று விசுவாசிப்பதினால் தேவனுடைய பார்வையில் நாம் குற்றப்படுத்தப்படுவது இல்லை என்பதற்கு எந்த மறுப்பும் கிடையாது ஏன்னா இயேசு நமக்காக எல்லாவற்றையும் சுமந்துகொண்டார். இதுல எந்தவித மாற்றமும் இல்லை மேலும் நம்முடைய வாழ்வில் இதை விசுவாசிப்பதினால் எல்லாம் மறு ஆய்வு செய்யப்பட்டு நியாயந்தீர்க்கப்படும்,. இதுல நல்லதும் இருக்கும் கேட்ட தீமையான விஷ்யங்களும் இருக்கும்.

முந்தைய நிகழ்ச்சியில் சொன்னது போலவே தான், அதாவது, தேவன் நம்முடைய வாழ்க்கையை முன்வைத்து அதை பதிபிடுவது தங்கத்தை புடமிடுவதற்கும், வெள்ளி, விலையேறபெற்ற கல், மரம், புல், வைக்கோல் போல இருக்கும், அவர் அவற்றை சுட்டெரித்து நாம உண்மையாகவே எப்படிவாழ்ந்திருக்கிறோம் என்பது பார்க்க போகிறார் ஏதாவது குறிப்பிட்ட பாவங்கள் இருக்கிறதா, நா ஏற்கனவே சொன்னது போல, நாம உண்மையில், அதாவது அவை அனைத்தும் இயேசுவின் இரத்தத்திற்கு கீழாக நமக்கு வெளிபடுத்தப்படும்.

ஆனா ஏதாவது ஒரு விதத்தில், இந்த மதிப்பிடும் நிலை நடக்கப்போகிறது, நண்பர்களே, இன்றைக்கு, நீங்க இதை புரிந்துகொள்ளணும், இதுல தப்பிக்க வாய்ப்பில்லை. இதுலிருந்து நீங்க தப்பிக்கவே முடியாது. உங்களுக்கு பதிலாக நீங்க யாரையும் கூப்பிட

முடியாது. இதிலிருந்து தப்பித்து கொள்ளலாம் என்று நினைக்கவே முடியாது ஏன்னா பவுல் சொல்லுகிறார், நாம கிறிஸ்துவுக்கு முன்பு விசுவாசிகளாக வெளிப்பட வேண்டியிருக்கிறது."

*****

**ஆன்கர்பெர்க்:** அடுத்து,உங்க பலனில் பங்கு வகிக்கும் நீங்கள் பணத்தை செலவு செய்யும் விதத்தை குறித்து பார்க்கலாம் வேதம் சொல்கிறது கிறிஸ்துவிடம் இருந்து ஒருநாள் பலன்பெறுவீர்கள் என்று. நான் Dr. லட்சரிடம் கேட்டேன், "பணத்தை எப்படி செலவு செய்யணுன்னு அதிகப்படியான வேதாகம குறிப்புகள் இருக்க காரணம் என்ன? அது ஏன் அவ்வளவு முக்கியம்? கவனியுங்கள்:

**எர்வின் லட்சர்:** ஜான், இயேசு நாம பணத்தை எப்படி செலவு செய்யணும் என்பதற்கு உவமைகளை சொல்ல என்ன காரணம் என்றால் நாம அதன் அடிப்படையிலும் பலன்களை பெற்றுக்கொள்ள போகிறோம் ஏன்னா நம்முடைய இருதயம் திருக்குள்ளது பராசையுடையது என்று அவருக்கு நல்லா தெரியும். நாளைக்காக தேவனை விசுவாசிக்க முன்வர மாட்டோம். அதனாலதான் இயேசு இப்படி சொல்கிறார். லூக்கா பதினாறாம் அதிகாரத்தில், இந்த அருமையான வரிகளை அவர் சொல்லியிருக்கிறார் - பணத்தை குறித்து பேசுகிறார்; பரிசேயர்கள் அவரை விமர்சித்து பேசுகிறார்கள். அவர் சொன்னதை அவர்கள் விரும்பவில்லை - அவர் சொன்னார், "மனுஷருக்குள்ளே அது மேன்மையாக எண்ணப்படுகிறது என்றார்." சரி,

எது மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது? இதற்கான பத்தி, நிச்சயமா, பணம்தான். அதாவது, அதை திருடுகிறவர்கள் உண்டு. அதற்காக போய் சொல்கிறார்கள். அதற்காக எமாற்றாருகிறார்கள். அதனால் இயேசு சொல்கிறார், அது தேவனுக்கு முன்பாக அருவருப்பாக இருக்கிறதாம்." அருவருப்பு.

இப்ப, இதே இடத்தில் தான் அவர் பணத்தை எப்படி கையாளவேண்டும் என்றும் சொல்லுகிறார். இங்கு அவர் ஒரு உக்கிராணக்காரன் தான் தள்ளப்பட்ட பிறகு தன்னை ஏற்றுகொள்ள மக்கள் உண்டாகும் படி நண்பர்களை சம்பாதித்துகொள்ளும் உவமையை பற்றி எடுத்து சொல்லுகிறார். உங்களுக்கு அந்த கதை தெரியும். இயேசு இந்த கதையின் நீதியை பற்றி சொல்லவில்லை ஆனால் அங்கு அவன் நடந்துகொண்டதை பற்றிதான் சொல்லுகிறார். இது லூக்கா பதினாறாம் அதிகாரத்தில் இருக்குது.

அதுமட்டுமல்ல இயேசு இதையும் சொல்லுகிறார் - இதை பற்றி நீங்களும் சிந்திக்கும்படி விரும்புகிறேன் ஏன்னா இது ரொம்ப முக்கியமான ஒன்று. இயேசு சொல்கிறார், "நீங்க இன்னொருத்தருடைய பொருட்களில் உண்மையில்லாதவர்களாக இருந்தால் எப்படி உங்களுக்கு உண்மையான சம்பத்து உண்டாயிருக்க முடியும்? தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கும் காரியத்தில் நீங்கள் உண்மையாக இராவிட்டால், அவர் எப்படி உங்களை நம்பி வேறு காரியங்களை

கொடுக்க முடியும்? மேலும் அவர் பணத்தை அநீதியுள்ள உக்கிராணக்காரன் என்கிறார்."

அதாவது, நாம சொல்லிகொள்கிறோம், இல்ல, சமநிலையா இருக்கு. இது எப்படி செலவிடுகிறோம் என்பதை பொருத்திருக்குது. இதுவும் ஒருவிதத்துல உண்மைதான். ஆனா இயேசு நாம இந்த சமாதானத்துக்குள்ள வந்திட கூடாது என்பது போலதான் சொல்கிறார். அதை அநீதியுள்ள உக்கிராணக்காரன் என்கிறார் ஏன்னா அதை பெற்றுக்கொள்ள உங்களால என்னவெல்லாம் செய்ய முடியுமோ அது எல்லாத்தையும் செய்திட நினைப்பீர்கள். அதாவது, ஹேட்டன்ராபின்சன், ஒருமுறை அவர் சொன்னதை கேட்டிருக்கிறேன் அதை சொல்ல விரும்புகிறன். "அதாவது, வேதம் சொல்கிறது பண ஆசை எல்லா தீமைக்கும் வேறாக இருக்கிறது, இதை சமாளிக்கும் விதத்தில் நாம என்ன சொல்கிறோம், எனக்கு, பணத்தின் மீதி பிரியம் கிடையாது, அப்படி சொன்னாலும் நாம, அதை அபகரித்து நமக்கென்று வைத்துகொள்ள முயலுகிறோம் என்றார்."

மேலும் Dr. ராபின்சன் சொல்கிறார், நாம சமாளிக்கிறோம். நமக்கு பணம் பிடிக்காது என்கிறோம் ஆனா அதை நேசிக்கிறோம், தழுவி கொள்ளுகிறோம், சந்தோசப்படுகிறோம், ஆனா, என்ன, அது மேல நமக்கு ஆசை இல்லை." சரி, தேவன், உண்மையில், இந்த மாயமாலத்தை கடந்து பார்க்கிறவராக இருக்கிறார் ஏன்னா

இயற்கையாகவே நமக்கு பண ஆசை இருக்குன்னு அவருக்கு தெரியும் இந்த பண ஆசை உடைக்கப்படவேண்டும்.

அதாவது, ஜான், எனக்கு ஐரோப்பிய கதை ஒன்று ரொம்ப பிடிக்கும் ஒரு இளவரசி ஒருவரை திருமணம் செய்கிறாள் அவள் கணவர் மிகுந்த செல்வந்தன் திருமணத்திற்கு பிறகு அவளுக்கு சில நகைகளை வாங்கி கொடுக்கிறார். அவர் தனக்கு தானே சொல்லிகொண்டாள், “ அதாவது, இந்த நகைகளை எல்லாம் விற்று ஒரு அநாதை ஆசரமம் துவங்க வண்டும்.” அவர் சொன்னார், இல்லை! உனக்காக நான் வாங்கினது உனக்கு பிடிக்கலையா? என்று, கேட்டார். எல்லாரும் இந்த கட்டத்தை கடந்திருக்கிறோம் - திருமணமானவர்களுக்கு இது நல்லா புரியும். இறுதியா அவள் அவனை சமாதானபடுத்த அவன் சொன்னான், சரி, அதை நீ விற்றுவிடு என்றான்.” அவள் அந்த நகைகளை விற்றாள் பிறகு அந்த பணத்தை எடுத்து ஒரு அநாதை இல்லம் கட்டிடம் கட்ட துவங்கினாள். அந்த இடத்தில் பிள்ளைகள் எல்லாரும் பாடல் பாடியும் வசனங்களை மனப்பாடம் செய்யவும் துவங்கினார்கள் ஒரு நாள் அவள் வீட்டிற்குள் வந்து அவளுடைய கணவரிடம் சொன்னா, என்னோட நகை கிடைத்துவிட்டது! என்னோட நகைகளை பார்த்தேன்! அதை நான் அந்த சின்னஞ்சிறு சிறார்களின் கண்களில் வாழ்க்கையில் பார்த்தேன் என்றாள்!

ஜான், அவ உண்மையில் ஞானமான பெண் ஏன்னா வாழ்க்கையில் எப்போது நான் கேட்க்கிற ஒன்று, “உன்னோடு நீ எதையும் கொண்டு

போவது கிடையாது! ஆமா, அது உண்மைதான்! ஆனா நீங்க என்ன செய்யணும், நாம என்ன செய்யணுன்னா அதை பூமிக்கும் பரலோகத்திற்கும் இடையில் உள்ள பாலம் போல கட்டி எழுப்பிட வேண்டும், அதாவது நம்முடைய பணத்தை சுவிசேஷத்திற்காக விதிக்க மக்களுடைய வாழ்வில் விதைக்க கற்றுக்கொள்ளவேண்டும். இயேசு இந்த உவமையில் சொன்னது போல மிஷனரிகளுக்கு கொடுக்க கற்றுக்கொள்ள வேண்டும், "நித்தியத்தில் உங்களை வரவேற்க்கிறவர்கள் இருக்கும்படியாக இப்படி செய்திடுங்கள்." பணத்திற்கு அவ்வளவு பவர் இருக்குது அதை நாம கொடுக்காமல் விட்டுட்டா, நாம உண்மையில் பெரிய சுயநலவாதிகளாக மாறிடுவோம். அதனால்தா இயேசு சொல்றாரு சிறியதில் உண்மையாக இரு அப்போது ராஜ்யத்தில் பெரிய பொறுப்புகளை கொடுத்து அதிகாரியாக்கிடுவேன்.

**ஆன்கர்பெர்க்:** உங்களில் சிலரிடம் நிறைய பணம் இல்லாமல் இருக்கலாம் நீங்க யோசிக்கலாம், "நா, இந்த அளவுக்கு பணத்தை தேவனுக்கு கொடுக்க வேண்டியது ரொம்ப முக்கியம் என்று நினைக்கலாம். அப்படி செய்தால் எனக்கு கொஞ்சம் பணம் இருப்பதால, இது தேவன் தவறாக எடுத்துகொள்ள மாட்டார்." கவனிங்க, பணம் ஒரு பொருட்டல்ல, ஆனால் இருதயத்தின் மனப்பான்மை எப்படி இருக்கிறது என்பதுதான் இங்கு கணக்கு வைக்கப்படுகிறது. Dr. லட்சர் விளக்கமளிக்கிறார்.

**எர்வின் லட்சர்:** நிச்சயமாக தான், இதை கேட்டுகொண்டிருக்கிற யாராவது ஒருவேளை கேட்கலாம், “அளவுதான் முக்கியமா? இல்ல! எந்த மனப்பான்மையோடு கொடுக்கிறீங்க என்பதுதான் முக்கியம். உங்ககிட்ட அதிகம் இல்லாதிருந்தும் உதாரத்துவமா கொடுத்தா - அதாவது, இரண்டு காசு காணிக்கை போட்ட விதவையை யோசித்து பாருங்க. ஒருத்தர் இதை கணக்கு போட்டாங்க அன்னைக்கு அது இரண்டு காசாக இருந்தது, அந்த பணத்தை முதலீடு செய்தா குறைந்தது 5 சதவிகிதம் என்று பார்த்தாலும் 2000 வருடங்களில், அதனுடைய பெருக்கத்தை யோசித்து பார்த்தா 19 உடன் சுமார் நாற்பத்தி ஐந்து சைபர்கள் போடவேண்டி இருக்கும் என்பதாக வாசித்தேன். இப்ப, இதை எதுக்கு சொல்றேன்னா உண்மைய புரிஞ்சுக்கணும் நாம கொடுக்கிற எல்லாத்தையும் தேவன் கணக்கு வைக்கிறார் அதை பரலோக வங்கியில் போடுவதாக நினைத்து கொடுங்கள். அது முசுவல் பன்ட் போன்றது. தொடர்ந்து லாபத்தை கொடுத்துட்டே இருக்கு ஏன்னா பணத்தை கொண்டு நல்லது செய்யும்போது அது பெருகிக்கொண்டே இருக்கும்.

இறுதியாக, நாம உதாரத்துவமாக பலனளிக்கபடுவோம் ஏன்னா அன்பின் நிறைவில் இருந்து எடுத்து கொடுக்கிறோம் ஏன்னா அதனாலதான் தேவன் அதை கணக்கில் எடுத்து கொள்கிறார். உங்களால் இயன்றதை கொடுங்கள். உதாரத்துவமாக கொடுங்க இயேசு

சொல்கிறார் நித்தியத்தில் உங்களை வரவேற்க ஆட்கள் இருக்கும்படி அப்படி செய்திடுங்கள்."

**ஆன்கர்பெர்க்:** இன்றைக்கு போறதுக்கு முன்னால இறுதியாக ஒரு காரியம். கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படுகிற பேச்சுக்களில் ஒன்று இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொண்டதில் இருந்து நாம ராஜாவின் பிள்ளைகளாக கருதப்படுகிறோம், அதனால ராஜாவின் பிள்ளையை போல வாழனும். அதாவது, நாம ஆரோக்கியமா இருக்கணும், செல்வந்தரா இந்த உலகத்தில் ஞானவானாக இருக்கணும். இது வேதாக ரீதியாக சரியா தவறா? கவனியுங்கள்:

**எர்வின் லட்சர்:** அதாவது, நாம ராஜாவின் பிள்ளையை போல இருக்கனுன்னு சொல்றதை கேட்டு இருக்கிறோம். அதாவது, நாம தேவனை சேர்ந்தவர்கள் இல்லையா? தேவன் நம்முடைய தகப்பன் இல்லையா? நாம இந்த உலகத்தில் ஆரோக்கியமா செல்வந்தரா ஞானவானாக இருக்க முடியாதா? நம்மளால முயன்ற அனைத்தையும் நாம அபகரிக்க நமக்கு அதிகாரம் இல்லையா? ஒன்றை நீங்கள் புரிந்துகொள்ள விரும்புகிறேன் ராஜாவின் பிள்ளையாக இருப்பது நல்லதுதான், ஆனால் வேதம் தெளிவாக சொல்கிறது நாம் தேவனுடைய குமாரன் இந்த பூமிக்கு வந்தபோது எப்படி இருந்தாரோ அப்படி இருக்க வேண்டும் என்று கூறுகிறது. நம்முடைய ராஜரீகத்துவம் எதிர்காலத்திற்கு வைக்கப்பட்டு இருக்கிறது. மேலும் இயேசு சொல்கிறார், 'தன்னைத்தான் தாழ்த்துகிறவன்

உயர்த்தப்படுவான்." அது மட்டுமல்ல, நாம் எல்லாரும் இயேசுவை பற்றி நினைக்கும்போது அவர் பெத்லகேமில் மாட்டு தொழுவத்தில் பிறந்தவராக பார்க்கிறோம். நம்முடைய் இரட்சகராக அவர் ஏழ்மையில் பிறந்தார் என்கிறோம்.

அதனால நாமும் ஏழ்மையில் இருப்பதை ஏற்றுகொள்ள வேண்டும் என்று அர்த்தம் கிடையாது என நினைக்கிறேன். ஆனா உறுதியா ஒன்னு சொல்லலாம் எல்லா விசுவாசிகளுக்கும் இந்த உலகத்தின் செல்வம் இருப்பதில்லை என்றும் ஜனங்களை நியாயந்தீர்க்க முடியாது என்றும் கற்றுகொடுக்கிறது, "சரி, நீங்க ஏழ்மையாக இருப்பதால ராஜாவின் பிள்ளை இல்லையோ." அப்படின்னா உலகம் முழுவதிலும் நிறைய சகோதர சகோதரிகளை ஒதுக்கிட வேண்டியிருக்கும். முக்கியமானது என்னன்னா நமக்கு பொறுப்பு இருக்குன்றத புரிந்துகொள்ளணும் - பொருளாதார ரீதியாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் - உதாரத்துவமாக கொடுக்கணும். நம்மை நாமே தாழ்த்த வேண்டிய பொறுப்பு இருக்குது அப்பத்தா தேவன் தம்முடைய சித்தத்தின் படி தம்முடைய நேரத்தில் நம்மை உயர்த்திடுவார்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம்

செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.